# அரியாலை - பிரதேச ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

### செயற்றிட்ட சுருக்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஒரு அழகிய கிராமமாகும். மருதம், நெய்தல் என பண்டைய தமிழர் நிலவுடமைகளுடன் செழித்து நிற்கும் உப்பு வளம், கடல்நீரேரி மற்றும் மருதம் செழிக்கும் வயல் நிலம் தென்னந் தோப்புகள் பனைமரக் காடுகளும் நிறைந்து கிடக்கும் ஒரு வளம் செழிக்கும் ஊராக அரியாலை இருக்கிறது. பண்டைய காலத்து தென்னிந்திய அரசவழித் தொடர்புகளும் தென்னிந்திய அரச கடல்வெளி போக்குவரத்தும் அரியாலை ஊடாக நடந்துள்ளுது. அதிக அரிவு ஆலைகள் இருந்ததன் காரணமாக அரியாலை என பெயர் மருபி ஊரின் பெயராக மாறியுள்ளது.ல பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் என சமூக செயற்பாட்டில் முன்னிற்கும் ஒரு சிறந்த பிரதேசமாக அரியாலை காணப்படுகின்றது. ஒரு தேசிய காற்பந்தாட்ட விளையாட்டு அரங்கம் அரியாலையில் அமைந்துள்ளது.

சமய நல்லிணக்கம் சைவசமய கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் அதிகம் காணப்படுகின்றது.

### செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

அரியாலை (Ariyalai) யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி வீதியில் அரிசி ஆலைகள் நிறைந்த இடம் குறிப்பாக பல வேளாண்மை குடும்பங்கள் இருப்பதால் அரியாலை என அழைக்கப்பட்டது. இப்பகுதியில் கலை/கலாச்சார/விளையாட்டு விழுமியங்கள் சுதேசியம் என்னும் நிர்வாகம் மூலம் வளர்க்கப்பட்டு சித்திரைப் புத்தாண்டில் சுதேசிய விழாவாக கொண்டாடப்படுகின்றது. இப்பகுதியில் கல்வி மற்றும் சமூக வளர்ச்சிகளில் மிகவும் முன்னேறியுள்ளது

முக்கியமாக மக்களை சமூகப்படுத்தும் வேலையை செய்து வருகின்றன. விளையாட்டு, கலை, சிறுவர் உள உடல் வளர்ச்சி செயற்பாடு, கல்விச் செயற்பாடு, என பாரிய சமூக வளர்ச்சி செயற்திட்டத்தில் சன சமூகநிலையங்கள் அரியாலையில் முக்கிய இடத்தைப்

பெறுகின்றது. இவற்றில் சில சனசமூக நிலையங்கள் நூற்றாண்டுகளைக் கடந்து தமது சேவைகளைச் செய்து வருவது அரியாலையின் மிகப்பெரும் பெருமையாகும்.

இவ்வாறு அரியாலை ஊர் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அவற்றை ஆவணப்படுத்துவதன் முக்கியத்தை நூலக நிறுவனம் அடையாளம் காண்பதோடு அவற்றை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் ஆவணப்படுத்துவதன் அவசியத்தையும் உணர்கின்றது

செயற்பாடுகள்

- செயற்றிட்ட வடிவமைப்பு

பங்குதாரர்களின் உள்ளீட்டைப்பெற்று, ஒத்த செயற்றிட்டங்களை மீளாய்ந்து, செயற்றிட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைபொருளாக துல்லியமானதொரு செயற்றிட்டம் வடிவமைக்கப்படும்.

- சந்திப்புக்கள்/ நிகழ்வுகள்/ பயிற்சிப்பட்டறைகள்

அரியாலை வாழ் மக்கள் ஊடான சந்திப்புக்கள், நிகழ்வுகள் ஊடாகவே அரியாலை தொடர்பான ஆவணப்படுத்தல் சாத்தியமாகிறது.

மேலும், அரியாலை மக்களை தாங்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் தொடர்பான செயற்பாட்டில் ஈடுபட வைப்பதும், அதற்கான இயலளவினைக் கூட்டுவதும் இந்தச்செயற்றிட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்குப் பயிற்சிப்பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடுத் தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச்சேகரிப்பும் எண்ணிமப்பாதுகாப்பும்.

அரியாலை மக்களால் வெளியிடப்பட்ட அரியாலை தொடர்பான தகவல் வளங்களைக் கண்டடைந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல். குறிப்பாக எத்தனை வளங்கள் இவ்வாறு கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணிப்பது சிக்கலாக உள்ளது. எமது முதற்கட்ட உரையாடல்களினூடாக மேலும் தெளிவு கிடைக்கலாம்.

  - நூல்கள்
  - பருவ இதழ்கள்
  - நிறுவன /நிகழ்வு/நிறைவு/ சிறப்பு மலர்கள்
  - நினைவுமலர்கள்
  - துண்டுப்பிரசுரங்கள்
  - குறுங்கால ஆவணங்கள்
  - ஆவணப்பதிவுகள்

- ஏனைய எழுத்தாவணங்கள்

- களப்பணிகளும் பல்லூடக ஆவணப்படுத்தலும்

களப்பணியினூடாக உருவாக்கப்படும் வளங்கள் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வெளியிடப்படும்

- பல்லூடகப்பதிவுகளை சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
- ஒளிப்படங்கள் எடுத்தல்
- காணொலளிப் படப்பிடிப்பு
- வாய்மொழி வரலாறுகள்

- தரவுத்தொகுப்புகள்

மேற்குறிப்பிடப்பட்ட முதன்மை மற்றும் துணைத் தரவுச் சேகரிப்புக்களின் ஊடாக பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக மாற்றித் தொகுத்தல்.

- மாவட்ட புள்ளி விபரங்கள் (மக்கள் தொகையியல், கல்வி, நலம், பொருளாதாரம்)
- இடங்கள்
- இயற்கை வளங்கள்
- தொல்லியல் களங்கள்
- நபர்கள்
- நிறுவனங்கள்

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- அனுபவம் மிக்க மற்றும் தொடர்ந்தும் நூலகத்துடன் இணைந்து பணியாற்றத்தக்க கள ஆய்வாளரை அடையாளம் காணுதல் சவாலாக அமையலாம். நீண்ட கால பணியாளர் இருக்கையை உறுதி செய்யும் வகையிலும் அவரின் கல்வி தகைமை கள அனுபவத்தின் அடிப்படையிலும் அவருக்கான சலுகைகள் மறுபரிசீலனை செய்ய ஆலோசிக்கலாம்

- அரியாலையில் நீண்ட காலம் வாழ்ந்த நபர்கள் பல்வேறு இடங்களுக்கும் புலம்பெயர்ந்திருக்கலாம் என்பதனால் அவர்களை அடையாளம் காண்பது சவாலாக இருக்கலாம்.

எதிர்பார்க்கப்படும் பாதீடு
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு

https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132